**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.125/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.1** |
| **Name** | **:** | **திரு. செல்வராஜ்** |
| **Father's Name** | **:** | **திரு. சின்னகண்ணு** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**எதிரிகள் 1, 2, 4 முதல் 7 ஆஜர். 8வது எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 கு.வி.மு.ச. -ல் மனு தாக்கல் செய்யப்பட்டு அடையாளம் குறித்த ஆட்சேபனை இல்லை என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதின் அடிப்படையில் மனு அனுமதிக்கப்பட்டது.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.06.2023.**

**முதல் விசாரணை -**

நான் கொண்டையாங்குப்பம் கிராமத்தில் வசித்து வருகின்றேன். விவசாய வேலை செய்து வருகின்றேன். இறந்து போன கண்ணன் என் மாமனார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 1-வது எதிரி கிருஷ்ணன் என்னுடைய பெரியப்பா ஏழுமலையின் மகன், பங்காளி தம்பி. 2-வது எதிரி 1-வது எதிரியின் அண்ணன். 3வது எதிரி ஏழுமலை என் பெரியப்பா. 4-வது எதிரி தனலட்சுமி என்பவர்

ஏழுமலையின் மகள். 6-வது எதிரி கன்னியம்மாள் என்பவர் 2-வது எதிரியின் மனைவி.

7-வது எதிரி 2-வது எதிரியின் மகள். 5-வது எதிரி, எதிரி தனலட்சுமியின் கணவர். 8வது எதிரி, 3-வது எதிரி ஏழுமலையின் மைத்துனர், அவர் சென்னையில் குடியிருக்கிறார். எதிரிகள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இந்த வழக்குச் சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். 28.07.2011 அன்று மாலை 5.30 மணியிலிருந்து 6.00 மணிக்குள் என்னை விசாரித்தார்கள்.

எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் நிலம் கிழக்கு மேற்காக உள்ளது. எதிரிகள் நிலத்தை வடக்கு தெற்காக வேண்டும் என்று தகராறு செய்து வந்தார்கள். அவர்கள் வடக்கு தெற்காக நிலம் வேண்டும் என்று 40 வருடங்கள் கழித்து தகராறு செய்தார்கள். அதனால் எதிரிகள் அவர்களாகவே தன்னிச்சையாக வந்து வடக்கு தெற்காக வரப்பு போட்டு உளுந்து விதைத்தார்கள். அதனால் எங்கள் குடும்பத்தார் மகாலிங்கம் என்பவரை டிராக்டர் உழுவதற்காக அழைத்து வந்தோம். அழைத்து வரும்போதே எதிரிகள் தகராறு செய்ததால் மகாலிங்கம் அவரது டிராக்கடரை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டார்.

அதனால் என் மாமனார் எதிரிகளிடம் இதுகுறித்து கேட்ட போது, கிருஷ்ணன் என்பவர் கத்தியால் தலையின் இடது மற்றும் வலது புறத்தில் என் மாமனாரை வெட்டி விட்டார். மாரி முத்து இரும்பு தடியால் என் மாமனாரை தலையில் அடித்துவிட்டார். நான் வந்து மடக்கி விடும் போது கிருஷ்ணனின் கையில் இருந்த கத்தியை பிடிங்கி மாரிமுத்து என்பவர் எனது இடது மண்டையிலும், இடது நடுவிரலிலும் வெட்டிவிட்டார்.

தமிழ்மணி என்பவர் வந்து மடக்கி கத்தியை பிடிங்கி போட்டார். அதன் பிறகு பெண் எதிரிகள் எல்லோரும் சேர்ந்து என் மாமியாரை இரும்பு தடியால் அடித்து என் மாமியாரின் இடது கையை உடைத்துவிட்டார்கள். பெண் எதிரிகள் என் மனைவியின் இடுப்பு மற்றும் தோள்பட்டை, உடம்பு முழுவதும் அந்த நேரத்தில் கிடைத்த கட்டை, கம்பியை வைத்து அடித்துவிட்டார்கள்.

தகராறில் என் மனைவி, மாமனார், மாமியார் ஆகியோர் மயங்கி விழுந்துவிட்டார்கள். மாயன் என்பவர் ஆட்டோவை வரவைத்தார், முருகன் என்பவர் ஓட்டி வந்தார். ஆட்டோவில் நான், என் மனைவி, மாமனார் மற்றும் மாமியார் ஆகியோர் வந்தவாசி அரசு மருத்துவமனைக்குச் சென்றோம். அங்கு எனக்கு மட்டும் தையல் போட்ட பிறகு மற்றவர்களை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு போகச் சொன்னார்கள்.

நான் சிகிச்சை பெற்றுக் கொண்ட பிறகு நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற போது, அங்கு என் மனைவி மற்றும் மாமியாரை மட்டும் அனுமதி செய்தார்கள், என் மாமனாரை சென்னை அரசு மருத்துவமனைக்கு அழைத்து போகச் சென்னார்கள். அதன்படி என் மாமனாரை நான் காலை 3.00 மணிக்கு சென்னை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தேன்.

அங்கு என் மாமனாருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அறுவை சிகிச்சைக்கு பிறகு 3 நாட்கள் உயிருடன் இருந்தார், பிறகு இறந்துவிட்டார். செங்கல்பட்டு மருத்துவமனையில் நாங்கள் சிகிச்சையிலிருந்த போது தெள்ளார் காவல் நிலையத்தினர் வந்து என்னிடம் கேட்டார்கள், நான் நடந்தவற்றைச் சொன்னேன். நான் சொன்னதை எழுதிக் கொண்டார்கள். அதில் நான் கையொப்பம்

போட்டேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் கையொப்பம் போட்ட தாள் தான் அது. புகார் **அ.த.சா.ஆ-1**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

போலீசார் சென்னை செல்வதாகச் சொன்னார்கள். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். என் மாமனார் இறந்த பிறகு போலீசார் என்னை மீண்டும் விசாரணை செய்தார்கள். பிறகு என் மாமனாரின் பிரேதத்தை பெற்று வந்தேன்.

**1, 2, 4 முதல் 7 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

என் தாத்தாவின் பெயர் மாரிமுத்து கவுண்டர். என் தாத்தா மாரிமுத்து கவுண்டர் சொத்து எதுவும் விட்டுவிட்டு போகவில்லை என்றால் சரியல்ல. 3-வது எதிரி ஏழுமலை கவுண்டர் என்பவர் தான் தகராறு சொத்து 1971ல் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல, பொது சொத்தை விற்று தான் கிரையம் வாங்கப்பட்டது. எங்களுக்கு பொது சொத்து என்பது கிடையாது என்றால் சரியல்ல.

என் தாத்தாவிற்கு சொத்து எதுவும் கிடையாது என்றால் 3 ஏக்கர் நிலத்தை செண்ட் ரூ.3/-ற்கு விற்பனை செய்து 2 1/2 ஏக்கர் நிலம் செண்ட் ரூ.4/- க்கு வாங்கப்பட்டது. என் தாத்தா மாரிமுத்துவிற்கு 3-வது எதிரி ஏழுமலை, என் அப்பா சின்னக்கண்ணு மற்றும் சுப்பிரமணி ஆகிய 3 மகன்கள் என்றால் சரிதான். 3-வது எதிரி ஏழுமலை அவருடைய சுயசம்பாத்தியத்தில் வாங்கிய சொத்தை தான் என் அப்பாவிற்கும், சுப்பிரமணிக்கும் தம்பி என்பதால் அனுபவ பாத்தியம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

ஏழுமலை கவுண்டர் சர்வே எண்.26/2ஐ என்ற நிலத்தை அவர் நிறுத்திக் கொண்டார் என்றால் சரிதான். சர்வே எண்.26/2ஐ க்கு வடக்கு பக்கத்தில் எங்களுக்கு அனுபவத்திற்கு விடப்பட்ட சர்வே எண்.26/2சி உள்ளது என்றால்

சரிதான். சர்வே எண்.26/2ஐ என்பது கிழக்கு மேற்காக சென்று நடுவில் வடக்கு தெற்காகச் செல்கிறது என்றால் அனுபவித்தில் அவ்வாறு இல்லை, யு.டி.ஆர்.ல் தான் அவ்வாறு உள்ளது.

( கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் சிவில் வழக்கு சம்மந்தமாக சொத்துக்களை குறித்து கேள்விகள் கேட்கப்பட்டதால் நீதிமன்றத்தால் பதிவு செய்ய மறுக்கப்பட்டது ).

நான் தகராறு நடந்ததாகச் சொல்லப்படும் சர்வே எண்.26/2ஐ ல் தான் உளுந்து விதைக்கப்பட்டது என்றால் சரிதான், ஆனால் 40 வருடங்களாக எங்கள் அனுபவத்தில் இருந்த இடத்தில் தான் உளுந்து விதைக்கப்பட்டது. எங்கள் அனுபவத்தில் இருந்தது என்றாலும், ஏழுமலையின் அனுபவத்தில் தான் இருந்தது என்றாலும், நான் சொல்வது பொய் என்றாலும் சரியல்ல.

தெள்ளார் வழியாக சென்று தான் வந்தவாசி அரசு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும் என்றால் நல்லூர் வழியாக சென்றோம். தெள்ளார் வழியாக செல்வது தான் குறைந்த தூரம் என்றால் சரியல்ல. நாங்கள் மருத்துவமனைக்கு சென்ற போது மாரிமுத்து, தனலட்சுமி, கன்னியம்மாள் மற்றும் ராதா ஆகியோரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்களா என்றால் நாங்கள் சென்ற பிறகு தான் அவர்கள் வந்தார்கள், அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது.

அவர்களுக்கும் பலத்த காயம் ஏற்பட்டது என்றால் அவர்களுக்குள் கூட அடித்துக் கொண்டிருக்கலாம். வந்தவாசி அரசு மருத்துவமனையில் எனக்கு எத்தனை தையல் போட்டார்கள் என்றால் கையில் 5 தையல்களும் தலையில் 4 தையல்களும் போடப்பட்டது. வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு தெள்ளார் காவல்

துறையினர் வந்தார்களா என்றால் வரவில்லை, அவர்கள் எங்களை விசாரிக்கவும் இல்லை.

நாங்கள் யாராவது தெள்ளார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் உயிர் போகும் நிலையில் இருந்ததால் காவல் நிலையத்திற்குச் செல்லவில்லை. சம்பவத்தில் சீத்தாராமன் என்று சொல்லும் போதே சாட்சி சம்பவத்தில் சீத்தாராமனே கிடையாது, அவருடைய மகன் கோசலராமன் தான் சம்பவத்தில் இருந்தார், அப்போது அவர் சிறுவயது நபர் என்பதால் அவரை இவ்வழக்கில் சேர்க்காமல் சீத்தாராமனை சேர்த்துவிட்டார்கள் என்று சாட்சி சாட்சியம் அளிக்கிறார்.

மேற்கண்ட சீத்தாராமனை பற்றிய சங்கதியை முதன் முதலான நீதிமன்றத்தில் தான் சொல்கிறேன் என்றால் காவல் துறையினரிடமும் சொன்னேன். சீத்தாராமனுக்கு கண் தெரியாது என்றால் சரிதான். செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் போலீசார் என்று விசாரணை செய்தார்கள் என்றால் 01.08.2011 அன்று மதியம் 4.00, 4.30 மணியளவில் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். அன்றைய தினம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். அ.சா.ஆ.1வில் அப்போது போட்ட கையொப்பம் தான் அது என்றால் சரிதான்.

புகார் வாக்குமூலத்தில் மாரிமுத்து இரும்பு தடியால் என் மாமனார் தலையில் அடித்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்த நேரம் பொழுது சாயும்நேரம் என்றால் சரிதான். என் மாமனார், மாமியார் ஆகியோர் எங்கு இருக்கிறார்கள் என்றால் சலவாதி கிராமத்தில் இருந்தார்கள். என் மாமனார் இறக்கும் போது 70 வயது இருக்கும் என்றால் சரிதான், மெல்லிய தேகம், உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் மெல்லிய தேகம், 70 வயது

என்றாலும் நன்றாக இருந்தார். என் பெரியப்பா ஏழுமலைக்கு மெல்லிய தேகம், 71 வயது இருக்கும்.

மாரிமுத்து உளுந்து விதைத்திருந்த இடத்தில் மேல் ஏர் ஓட்டுவதற்கு சென்றோம் என்றால் எங்கள் அனுபவத்தை தடை செய்ததால் தான் அவ்வாறு சென்றோம். அனுபவத்திற்கான ஆவணத்தை காவல் நிலையத்தில் ஒப்படைத்தோமா என்றால் ஒப்படைத்தோம். அனுபவத்திற்கான ஆவணம் எதையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

எதிரி மாரிமுத்து என்னுடைய இடது மண்டையிலும், இடது நடுவிரலிலும் வெட்டி விட்டார் என்பதை என்னுடைய புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தமிழ்மணி கத்தியை பிடுங்கி போட்டார் என்ற விவரத்தை புகார் வாக்குமூலத்திலும் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பெண் எதிரிகள் எல்லோரும் என் மாமியாரை இரும்பு தடியால் அடித்துவிட்டார்கள் என்பதை புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

பெண் எதிரிகள் எல்லோரும் என் மனைவியை கையில் கிடைத்த கட்டை, இரும்பு தடியை கொண்டு இடுப்பில் அடித்ததை குறித்து புகார் வாக்குமூலத்தில் சொல்லலியுள்ளேன் என்றால் சரிதான். மாயன் ஆட்டோவை எத்தனை மணிக்கு எங்கிருந்து வரவைத்தேன் என்றால் கொண்டையாங்குப்பம் கிராமத்திலிருந்து மாலை 6.30 மணிக்கு வரவைத்தேன்.

முருகன் என்பவர் அந்த ஆட்டோவை ஓட்டி வந்தார் என்றால் சரிதான். ஆட்டோ குறித்த விவரங்களை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். ஆட்டோவை பற்றி விவரங்களை நான் சொல்லவில்லை என்றாலும், பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னை விசாரித்து 01.08.2011 அன்று கையொப்பம் பெறுவதற்கு முன்போ என்னையோ, என் மனைவியையோ, வேறு யாராவதையோ போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை.

யார் புகார் கொடுத்து போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. போலீசார் என்னிடம் வந்தவாசி அரசு மருத்துவமனையில் விசாரணை செய்துவிட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு வந்ததாகச் சொன்னார்கள். வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு எதன் அடிப்படையில் போலீசார் சென்றார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் நாங்கள் போகும் போது மாரிமுத்து, தனலட்சுமி, ராதா மற்றும் கன்னியம்மாய் ஆகியயோரும் சிகிச்சைக்கு வந்தார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மாரிமுத்து, தனலட்சுமி, கன்னியம்மாள், ராதா ஆகியோர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் கன்னியம்மாளை சென்னை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எதிரிகள் அனுபவத்தில் இருந்த நிலத்தில் விதைக்கப்பட்ட உளுந்து நடவை நாங்கள் எல்லோரும் துராகரமாக சென்று அழிக்க முயற்சித்த போது எதிரிகளை தாக்கினோம் என்றாலும், அந்த தகராறில் நாங்களே எங்களுக்குள் இருட்டில் அடித்துக் கொண்டு காயங்களை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல.

எங்கள் நிலத்திற்கு அருகிலேயே அருந்ததி செல்வராஜ் என்பவரின் நிலம்

உள்ளது என்றால் சரிதான், அருகில் அவருடைய கொட்டகை உள்ளது என்றால் சரிதான். அதற்கு அருகில் எங்களுடைய கொட்டகை உள்ளது என்றால் சரிதான். அதேபோல் ஏழுமலை அவருடைய நிலத்தில் கொட்டகை போட்டுள்ளார் என்றால் பொது இடத்தில் போட்டுள்ளார்.

நான் சொல்வது போல் அது பொது இடம் அல்ல என்றால் சரியல்ல. என் நிலத்திற்கு அருகிலேயே என் சித்தப்பா சுப்பிரமணியின் நிலமும் கொட்டகையும் உள்ளது என்றால் சரிதான். தமிழ்மணி என்பவருக்கு என் தங்கையை திருமணம் செய்து கொடுத்துள்ளோம், தமிழ்மணியின் மகனுக்கு என் மகளை திருமணம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். தமிழ்மணி அறுங்குணம் என்றால் சரிதான்.

தமிழ்மணி என் மைத்துனர் என்பதால் அவர் இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, அவரும் இருந்தார். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் பிணாங்குகாரர் என்பவரின் நிலமும் கொட்டகையும் உள்ளது என்றால் சரிதான். பிணாங்குகாரர், என் சித்தப்பா சுப்பிரமணி, அருந்ததி செல்வராஜ் ஆகியோர் சம்பவத்தை பார்த்ததாக போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் அவர்கள் சம்பவத்தை பார்க்கவில்லை, அதனால் சொல்லவில்லை.

அவ்வாறு அவர்களைப் பற்றி சொல்லாததற்கு காரணம் நாங்கள் தான் தகராறிற்கு ஆரம்பகர்தாவாக இருந்தோம் என்றால் சரியல்ல. என்னுடைய மகள் மற்றும் மனைவி ஆகியோர் எதிரிகளின்மீது மிளகாய் தூளை கரைத்து ஊற்றி அவர்களை கண் தெரியாமல் செய்து அவர்களை அடித்து தாக்கினோம் என்றால் சரியல்ல, எல்லாம் பொய்.

01.08.2011-க்கு பிறகு என்னை போலீசார் விசாரணை செய்தார்களா என்றால்

என்னை விசாரிக்கவில்லை. 02.08.2011-ந் தேதி என்னை எத்தனை மணிக்கு பேலீசார் கைது செய்தார்கள் என்றால் காலை 5.00 மணிக்கு வீட்டில் வைத்து கைது செய்தார்கள்.

( கால நேரம் கருதி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது )

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.